## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 49/2021

பெயர் : சிங்காரவேல் P.W.2.

த/பெ. : தியாகராஜன்

தேதி : 07.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

**1.** யார் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் வாதி பவுஜியா கனி அழைத்து தான் வந்தேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி என்னிடம் நீதிமன்ற அழைப்பாணை கொடுத்து சாட்சி சொல்ல அழைத்தாரா என்றால் இல்லை. என்னை எதற்காக சாட்சியம் அளிக்க வரசொன்னார் என்றால் சுலைகா பீவியின் மருமகள் சுபைதா பீவி ஆவார். சுபைதா பீவியின் மகள் தான் பவுஜியா கனி என்ற விபரங்களை சொல்வதற்கு தான் வரசொன்னார் என்றாலும் வேறு விபரங்கள் எதையும் சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

2. எனக்கு பவுஜியா கனியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் எனது சிறு வயது முதல் தெரியும். எனது வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளி பவுஜியா கனியின் வீடு உள்ளது. நான் மளிகை கடையில் வேலை பார்க்கிறேன். எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/– சம்பளம் பெற்று வருகிறேன். நான் காலை 10.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மதியம் 02.00 மணிக்கு வீட்டிற்கு வருவேன். பின்னர் மாலை 04.00 மணிக்கு சென்று இரவு 10.00 மணிக்கு வருவேன்.

3. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் கூறினார்கள் என்றால் வழக்கறிஞர் தான் கூறினார். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சர்வே எண்கள் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் தான் கூறினார்கள். தாவா சொத்திற்கான மூல பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எத்தனை பத்திரங்கள் உள்ளன என்றால் தெரியாது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்றை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. வாதி பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள ஆவணம் என்ன ஆவணம் என்றும், அது எப்போது எழுதப்பட்டது

என்றும் தெரியுமா என்றால் தெரியாது. அது எங்கு பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் வாதி எந்த உரிமையின் அடிப்படையில் வசித்து வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் என்ன சம்பவம் நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. ஷேக் அலாவுதீனையும் அவரது மனைவி ஜன்னத்து பிர்தௌஸ் என்பவரையும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஜன்னத்து பிர்தௌஸ் ன் தகப்பனார் சகாபுதீனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சகாபுதீனின் சகோதரர் ஜெயினுலாபுதீன் மலேசியாவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை ஜெயினுலாபுதீன் சுபைதா மற்றும் சுலைகா பீவியிடமிருந்து கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை ஜெயினுலாபுதீன் மேற்படி நபர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் ஜெயினுலாபுதீன் வாதியை தாவா சொத்தில் வாடகைதாரராக குடியமர்த்தினார் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்கள் எனக்கு தெரியாமல் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்னேள் என்றால் சரிதான். நான் வாதிக்காக தான் கடைக்கு செல்லாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

5. எனக்கு தாவா சொத்து பற்றியும், தாவா சொத்தில் எந்த அடிப்படையில் வாதி குடியிருக்கிறார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றாலும், வாதி கேட்டுகொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.